இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,090, DECEMBER 1, 1905.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws relating to Public Markets, Board of Improvement, Nuwara Eliya.]

நுவரெலியாவின் சீர்திருத்தவின் சபையினது கஅகூ ம் வருஷத்துக் கட்டளைச்சட்டத்தின் ௬௦ ம் பிரிவினால் கிடைத்த தத்துவத்துக்கிணங்க, கஅகூஅ ம் வருஷத்து கஈ ம் கட்டளைச்சட்டத்தால் திருத்தப்பட்டபடி இதன் கீழ்க் கூறப் படுகிற துணைச்சட்டங்களை, எக்சிகுயிடிவ் என்னும் மந்திரசபையின் ஆலோசனையுடன் உபதேசாதிபதி உத்தமனிடம் ஒப்பிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன வென்பதை, இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உபதேசாதிபதி உத்தமனாது கட்டளைப்படி,

ஜி. எம். பௌலர்,
அக்டிங் கொலோனியல் சக்கிறத்தார்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோரில்,
கொழும்பு, ககூ௦டு ம் ஸு கார்த்திகைமீ உகூ ந உ.

---

1. பிரசித்த மார்க்கெட்டில் ஒழிய வேறெந்தவிடத்திலாவது உத்தரவின்றி சாமான் விற்கப்படாது.—யாதானுமோர் பிரசித்த மார்க்கெட்டு ஸ்தாபிக்கப்பட்டுத் திறக்கப்பட்டதின்பின் அவ்விடத்திலேயேயொழிய சீர்திருத்தவின் சபை எல்லைக்குட்பட வேறெந்த விடத்திலாவது உத்தரவுச்சீட்டுப் பெறுமல் யாதாமொருவனும் பிரசித்த விற்பனைக்காக யாதாமோர் மாமிசம், கோழி, வாத்து முதலியவை, மீன், புதுப்பழம், அல்லது காய்கறி வெளியேவைத்துக்கொள்ளப் படாது; மேலும் இந்தத் துணைச்சட்டத்துக்கு விரோதமாக விற்பனைக்காக வெளியே வைக்கப்படுகிற அல்லது கொண்டு திரிகிற மேற்சொல்லிய எந்த மாமிசத்தையும், கோழி, வாத்து முதலியவைகளையும், மீன், புதுப்பழவர்க்கம் அல்லது காய் கறி என்னப்பட்டவைகளையும் சீர்திருத்தவின் சபைச் சக்கிறத்தார் அல்லது இன்ஸ்பெக்டர் அவர்களால் பிடித்து உப ஏஜன்றுதுரை அல்லது பொலிஸ் மஜிஸ்திராத்து துரையவர்களால் ஒழுங்குபடுத்தும்வண்ணம் செய்யும்பொருட்டு அவைகளைச் சீர்திருத்தவின் சபைக் கந்தோருக்குக் கொண்டுபோதல் ஞாயமாயிருக்கும்.

2. பிரசித்த மார்க்கெட்டிலல்லாது வேறிடங்களில் விற்பனவுசெய்யக் கொடுக்கும் உத்தரவுச்சீட்டின் விதம்.—இத்தோடணைக்கப்படுகிற A என்னும் எழுத்தால் குறிக்கப்படுகிற மேற்சொல்லிய கடைசித் துணைச்சட்டத்தில் கண்ட சகல உத்தரவுச்சீட்டுகளும் அதநின் குறித்திருக்கும் காலத்துக்கு மாத்திரம் செல்லும்; அன்றியும் சொல்லப்பட்ட காலத்தின் பிரமாணம் பன்னிரண்டு மாதத்துக்கு மேற்படாமலும் ஒரு மாதத்துக்குக் குறைபடாமலுமிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட உத்தரவுசீட்டுப் பெற்றுக்கொள்ள முற்பணம் செலுத்தவேண்டும். மாதத்திற்கு பணவீதம் சதம் ௫௦, அன்றியும் அப்பேர்ப்பட்ட உத்தரவுச்சீட்டை வேண்டியபோது நீக்கிப்போடச் சீர்திருத்தவின் சபைக்குக் கூடும்.

3. ஆடு மாடடிப்போர் இறைச்சியைப் பிரசித்த மார்க்கெட்டிலொழிய வேறெந்த விடத்திலாவது வைத்துக்கொள்ளப்படாது.—ஆடு மாடடிப்போர் இறைச்சியை அல்லது கொல்லப்பட்ட ஏதுமோர் மிருகத்தின் மாமிசப்பங்கை பிரசித்த மார்க்கெட்டில் தான் கூலிக்கு எடுத்திருக்கும் கடையில்ஒழிய வேறெந்த விடத்தில் ஆவது வைத்து விற்பதும், விற்பனவுக்காக வைப்பதுங் கூடாது.

### A என்னும் செடூல்.

### மார்க்கெட்டின் வெளியே விற்பனவுக்காகக் கொடுக்கும் உத்தரவுச்சீட்டு.

——— ரூ. ——— இறுத்ததின்பொருட்டு நுவரெலியாவின் சீர்திருத்தவின் சபையாரால் ——— ம் ஸு ——— மீ ——— ந் திகதி பண்ணிக்கொண்ட தீர்மானத்திற்கு இசைய ——— துவக்கம் ——— வரைக்கும் விற்க உத்தரவு கொடுக்கப்பட்டது.

———

உப ஏஜன்று துரையவர்கள்.

4. மணல்முதலானவை எடுத்துக்கொண்டுபோதல்.—யாதானுமொருவன் உப ஏஜண்டுத்துரையவர்களின் உத்தரவின்றிப் பிரசித்த அல்லது கவர்ண்மேண்டு இடங்களிலிருந்து மணல், மண், கல், அல்லது வளரும் பூண்டு மரமுதலியவை கொண்டுபோதல் அல்லது அப்பேர்ப்பட்ட இடங்களின் மேற்பரப்பை வேறுபடுத்தல் அழித்தல் முதலிய இருத்திய மொன்றையும் செய்யப்படாது.

---

## LAND ACQUISITION NOTICES.

[Panwelatenna and Delpitiya, Kandy District.]

1876 ம் வருஷத்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பப்புராணைரேட்கோரள என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்வருஞ்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம 5499. குறிச்சி—பானவெலதென்னதெலபிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | வகை. | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| Q 888 | வாதியகொடவத்தை | தேயிலை | சொந்தக்காறன் 56,163 ம் படம் வை | 2 0 6 |
| R 888 | ஷை. | ஷை. | ச. ற. ம. ப. மு. பழனியப்பாசெட்டி திருப்பவர் | 0 0 0·25 |
| S 888 | எலகொற்வத்தை | ஷை. | வினாலும் பிரஞ்சும் | 0 2 20 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாசம் 16 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 17 ந் உ.

எச். வேஸ,
அரசாட்சி ஏசண்டு.

---

[Ukkuwela, Udupihilla, and Kalalpitiya, Matale District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்தளை, உடுபில்ல, கலல்பிடி, உக்குவல ரோட்டை திருத்துகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இலக்கம் 5,491. குறிச்சி—உக்குவலை. | | |
| S 887 | வகனுவத்த | கொகா தோட்டத்தின் துண்டு | செய்யது அசனுசாகிபு | 0 0 5 |
| T 887 | வெல்லகும்புற | வயல் | டிங்கிறிவண்டா | 0 0 13 |
| | | பிரதமபடத்து இலக்கம் 5,471. குறிச்சி—உடுபில்ல. | | |
| R 886 | தமுனுகும்புர | வயல் | கே. கதிரவேலு | 0 0 20 |
| | | பிரதமபடத்து இலக்கம் 5,470. குறிச்சி—கலல்பிடிய. | | |
| P 886 | மீகாமுலவத்தை | 4 பாக்கும் 1 பிலாமரமும் இருக்கும் ஒரு தோட்டம் | லேடி டி சொய்சா | 0 0 14 |
| Q 886 | தென்னவத்த | 3 கொக்கோவாவும் 11 பாக்குமரமுண்டு, கொக்கோவாதோட்டத்தில் ஒரு துண்டு | கெதித்துரை | 0 0 1·56 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாதம் 30 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளை கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 21 ந் உ.

ஆர். பி. ஏவிங்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Halangoda, Matale District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கற்குழிக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இலக்கம் 5,496. குறிச்சி—அலங்கொ ... | | |
| N 888 | பன்சலதென்ன | காடு, பதனையும் கல்லும் | கெண்டியன் இல் கொம்பெனி | 0 3 29 |
| O 888 | டிெ. | தே | டிெ. | 0 1 0 |
| P 888 | டிெ. | காடும் பதனையும் | டிெ. | 0 1 32 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரம்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாசம் 30 ந் தேதியிலன்று 1 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளை கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 24 ந் உ.

ஆர். பி. ஹெலிங்ஸ்
உதவி அரசாட்சி ஏசண்டு.

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்றுரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை நுவரகம்கோறளை இகலமெதகந்தாகேதுளாவையைச்சேர்ந்த நெல்லிக்குளம் என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, 547 ஏக்கர் 3 றூட்டு விசாலமுடையதும், சாமானியமாய் நெல்லிக்குளமேகெலே என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும், 344 ம் இலக்கப் பிரதமபடத்தில் 1 ந் துண்டாய்க் குறிக்கப்பட்டதுமான காணித்துண்டு. இதற்கெல்லை : வடக்கு-கட்டுகம்பொலகமக் கிராம எல்லை ; கிழக்கு-திவுல்வெவவிலிருந்து எப்பாவலக்குப் போகும் பிம்பாற (அவ்வ றேட்டு); தெற்கு-டிக்வெவக் கிராம எல்லை; மேற்கு-கந்தக்குளக் கிராம எல்லை, மெதகமக் கிராம எல்லை.

கவனிப்பு—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள், இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும், அவைகளின் விசாலத் தொகையாகும் 27 ஏக்கர் 2 றூட்டு 28 பேர்ச்சும் முன்சொன்ன 547 ஏக்கர் 3 றூட்டுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 344.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|
| 2 | நெல்லிக்குளமேபாளுவெவ | 5 | 0 | 38 |
| 3 | நெல்லிக்குளமேவெவ | 22 | 1 | 30 |
| | | 27 | 2 | 28 |

* இங்கிலிஷின் IV. ம் பாகம் 1480 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,342 Anuradhapura S. O. 127—1905

---

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்றுரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை எப்பாவலகோறளை எலியடதுளாவையைச்சேர்ந்த பச்சலவெத்திய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 373.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|
| 1 | சியம்பலாகாகேன | 4 | 2 | 15 |
| 2 | பச்சலவெத்தியேகெலே | 80 | 3 | 9 |
| 5a | பச்சலவெத்தியேஅக்கரேஇடம | 0 | 1 | 10 |
| 5b | கோன்காகெலே (பீ. பீ. 1,650/5,003 | 14 | 0 | 12 |
| | | 99 | 3 | 6 |

எல்லைகளாவன : வடக்கு-எலியதிவுல்வெவக் கிராம எல்லை : கிழக்கு-எலியதிவுல்வெவக் கிராம எல்லை ; தெற்கு-நிம்மாகமக் கிராம எல்லை ; மேற்கு-கூரிகஸ்வெவக் கிராம எல்லை, ரச்சல்லேகமக் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 14 ஏக்கர் 2 றூட்டு 13 பேர்ச்சும் முன்சொன்ன 99 ஏக்கர் 3 றூட்டு 6 பேர்ச்சுக்குள் அடங்கவில்லையென்பதையும் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 373.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|
| 2a | 211,999 ம் உரிமைப்பட்டத்தில் கண்டிருக்கும் காணி | 1 | 3 | 28 |
| 3 | பச்சலவெத்தியேவெவ | 6 | 1 | 15 |
| 4 | பனுகாகும்பற | 6 | 0 | 15 |
| 5 | பச்சலவெத்தியே அக்கரேஇடம | 0 | 0 | 35 |
| | | 14 | 2 | 13 |

* இங்கிலிஷின் IV. ம் பாகம் 1482 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,343 Anuradhapura S. O. 128—1905

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ஞு டிசம்பர் (மார்கழி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய சந்நிதானில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உருத்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை நுவரகம்கோறளை நுவரகம்துணாவளையைச்சேர்ந்த பொத்தானேகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 276.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|
| 1 | ... | பொத்தானேகமமூக்கலான | ... | ... | 469 1 10 |
| 2 | ... | பொத்தானேகமகெலே ... | ... | ... | 177 3 30 |
| 2a | .. | ஷை. | ... | ... | 0 1 10 |
| 2c | ... | பொத்தானேகமகெலே (பி.ப. 1,271/3,761) | | ... | 0 0 2 |
| 6 | ... | பொத்தானேகமவெல | ... | ... | 0 2 5 |
| 6a | ... | ஷை. ... | ... | ... | 0 1 15 |
| 6b | ... | ஷை. ... | ... | ... | 0 1 5 |
| 9 | ... | பொத்தானேகமகெலே ... | ... | ... | 9 0 20 |
| | | | | | 657 3 17 |

எல்லைகளாவன : வடக்கு-புத்தளத்திலிருந்து திருக்கோணமலைக்குப்போகும் பெரிய றோட்டு, திஸ்சாவெவ என்னுங் குளம்; கிழக்கு-திஸ்சாவெவ என்னுங் குளம், பூப்புவெவக் கிராம எல்லை, திம்பிரிக்கடவலக் கிராம எல்லை, ஆலங்குளக் கிராம எல்லை; தெற்கு-ஆலங்குளக் கிராம எல்லை, அக்கொமுவக் கிராம எல்லை, ஓகல்வெவக் கிராம எல்லை, கொறக்கெகாவக் கிராம எல்லை; மேற்கு-கொறக்கெகாவக் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்று நீக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 83 ஏக்கர் 2 றூட்டு 4 பேர்ச்சும் முன்சொன்ன 657 ஏக்கர் 3 றூட்டு 17 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 276.

| காணித்துண்டு. | | காணியின் பேர். | | | விசாலம். ஏ. அ. பே. |
|---|---|---|---|---|---|
| 2b | ... | பொத்தானேகமகெலே (பி. ப. $\frac{1,271}{3,760}$) | ... | ... | 12 0 10 |
| 3 | ... | பொத்தானேகமவெவ ... | ... | ... | 27 3 16 |
| 6c | ... | 87,085 ம், 160,633 ம், 160,640 ம், 160,641 ம், 160,642 ம், 160,643 ம், 160,653 ம் உரிமைப்படங்களில் முறையே கண்டிருக்கும் காணிகள் ... | ... | ... | 33 2 3 |
| 7 | ... | பொத்தானேகமவத்தை | ... | ... | 0 0 15 |
| 8 | ... | பொத்தானேகமவெவ (87,085 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி) ... | ... | ... | 10 0 0 |
| | | | | | 83 2 4 |

II.

பிரதம படம் 276.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|
| 7 | ... | பொத்தானேகமவத்தை (தெருவுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) ... | ... | ... | 0 0 15 |

எல்லைகளாவன : வடக்கு-முடிக்குரிய பொத்தானேகமவெவ; கிழக்கு-அநுராசபுரத்திலிருந்து குருநாக்கலுக்குப் போகும் றோட்டு; தெற்கு-முடிக்குரிய பொத்தானேகமவெவ; மேற்கு-160,633 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி.

* இங்கிலிஷ் IV. ம் பாகம் 1484, 1485 ம் பக்கங்களின் படங்களைப்பார்க்க.

2,344 Anuradhapura S.O. 129—1905

---

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ஞு டிசம்பர் (மார்கழி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜி. பிரேஸர்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜி. பிரேஸர்,
விசேஷ உத்தியோகத்தர்.

கட்டி காணிகளின் விபரம்.

ஊவா மாகாணம் பட்டிக்கிற்றைப் பகுதி போகொடைக்கோறளையைச்சேர்ந்த கெத்தம்ப என்னும் கிராமத்திலுள்ள ஒத்துடனிணைக்கப்படும்° உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 94.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 1 | ... | தண்டுகொல்லெதென்னேபத்தன அல்லது கறணின்னேபத்தன ... ... ... ... | 10 2 32 |
| 2 | ... | கறஸின்னேபத்தன அல்லது சமறபுவதென்னேபத்தன ... | 20 1 10 |
| | | | 31 0 2 |

எல்லைகளாவன : வடக்கு-கெற்றுவெலக் கிராம எல்லை, கறஸ்கெதற சியாத்து உருத்துப்பேசும் எலேகெதறஅருவ, யகாலகும்புறஎல என்னும் அருவி ; கிழக்கு-யகாலகும்புற புஞ்சிறுனேயும் மறுபேரும் உருத்துப்பேசும் யகாலகும்புறவத்தை, கறஸ்கெதற சியாத்து உருத்துப்பேசும் உடவத்தை, கறஸ்கெதற புஞ்சிறுனே உருத்துப்பேசும் பிற்றகாவத்தை ; தெற்கு-பற்றிப்பொலக் கிராம எல்லை ; மேற்கு-கெற்றுவெலக் கிராம எல்லை.

II.

பிரதம படம் 94.

| காணித்துண்டு | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 9 | ... | வறல்கெற்றியபத்தன, இன்னறவல்தென்னேகேனே, மிறிஸகொற்றுவேகேனே, மெற்றிக்கேகேனே, கொஸகொற்றுவேகேனே, பொறலந்தேகேனே, மகோகுலகபத்தன, டற்றனியேல்வேவத்தேகேனே | 90 3 30 |
| 9a | ... | வறல்கெற்றியபத்தனவும் மகோகுலகபத்தனவும் ... | 26 2 0 |
| | | | 117 1 30 |

எல்லைகளாவன : வடக்கு-கெற்றுவெலக் கிராம எல்லை ; கிழக்கு-115,528 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி, 109,787 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி, தோட்டப்பொலகந்துற என்னும் அருவி, லந்தேகும்புறெகெதற அப்புகாமியும் மறுபேரும் உருத்துப்பேசும் லந்தேகும்புறவத்தை, தோட்டப்பொலகந்துற என்னும் அருவி, லந்தேகும்புறகெதற வண்ணக்குவும் மறுபேரும் உருத்துப்பேசும் லந்தேகும்புற, லந்தேகும்புறகெதற வண்ணக்குவும் மறுபேரும் உருத்துப்பேசும் லந்தேகும்புறவத்தை, லந்தேகும்புறகெதற வண்ணக்குவும் மறுபேரும் உருத்துப்பேசும் லந்தேகும்புற, தோட்டப்பொலகந்துற என்னும் அருவி ; தெற்கு-துல்லேவ அதிகாரியின் உரிமைக்காரர் உருத்துப்பேசும் நாறங்கஸ அறுவ, தல்காவத்தேகெதற குதுகாமி உருத்துப்பேசும் தல்காவத்தை, கெத்தெம்மெகெதற விதானே உருத்துப்பேசும் கக்மாவத்தை, எறமுடுகொல்லே அப்புகாமியும் மறுபேரும் உருத்துப்பேசும் நாகாமுல்லேவத்தை, குதுகாமி கம்ருளே உருத்துப்பேசும் கல்பொத்தேஅறுவ, முடிக்குரிய கல்பொத்தே அஸவத்தும, மீகாஎல்ல உக்குபண்டா உருத்துப்பேசும் இலுப்பத்துகொடவத்தை, ஓர் அருவி ; மேற்கு-கெற்றுவெலக் கிராம எல்லை.

III.

பிரதம படம் 94.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 15a | ... | கொடவத்தேபத்தன அல்லது கெத்தெம்மேபத்தன (பி. ப. 781/2,725) ... ... ... | 14 2 31 |

எல்லைகளாவன : வடக்கு-எற்றலபிற்றியெகெதற குமா உரித்துப்பேசும் னேகாலந்தேகேனே, துல்லேவ அதிகாரியின் உரிமைக்காரர் உரித்துப்பேசும் யக்தெகிதென்னேகேனே, ஓர் அடிப்பாதை, துல்லேவ அதிகாரியின் உரிமைக்காரர் உரித்துப்பேசும் யக்தெகிதென்னேகேனே, கொங்கல்தென்னேக்குப் போகும் கன்சபா றோட்டு, கெத்தெம்மெகெதற அப்புகாமி உரித்துப்பேசும் கொடபிற்றவத்தை, உடகோஔவிலதந்துவா உரித்துப்பேசும் வடுவாவத்தேகேனே ; கிழக்கு-துககாகந்துற என்னும் அருவி ; தெற்கு-ஓர் அடிப்பாதை, உடகொஔவிலதந்துவாவும் இன்னொருவரும் உரித்துப்பேசும் விபனகொல்லேகேனே, ஓர் அடிபாதை, எற்றலபிற்றியெகெதற குமா உரித்துப்பேசும் கொடவத்தேகேனே ; மேற்கு-எற்றலபிற்றியெகெதற குமா உரித்துப்பேசும் னேகாலந்தேகேனே.

° இங்கிலீசின் IV. ம் பாகம் 1486, 1487, 1488 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

2,345 Uva S. O. 29—1905

---

[Tender for the sale of Opium Licenses, Tangalla and Hambantota.]

1899 ம் ஆண்டின் 5 ம், 1903 ம் ஆண்டின் 14 ம், 1905 ம் ஆண்டின் 9 ம் இலக்கச் சட்டங்களின் பிரகாரம், தங்கல்லே உதவி ஏஜன்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வோர் தலத்தில் 1906 ம் ஆண்டு ஜனவரிமாசம் 1 ந் தேதி தொடுத்து டிசம்பர்மாசம் 31 ந் தேதிவரையில் சில்லறையாய் அபின் விற்றதற்கு தத்துவம் கேட்குகின்ற கேள்விப்பத்திரங்களை தங்கல்லே தாலுயத்தில்வைத்து 1905 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 8 ந் தேதி பகல் 12 மணி வரையில் உதவி ஏஜண்டு அவர்களால் பாரமெடுக்கப்படுகின்றதை இதனுல் அறிவிக்கின்றன.

2. இன்னும் அம்பாந்தோட்டையிலும் உதவி ஏஜன்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வோர் தலத்தில் 1906 ம் ஆண்டு ஜனவரிமாசம் 1 ந் தேதி தொடுத்து டிசம்பர்மாசம் 31 ந் தேதிவரைக்கும் சில்லறையாய் அபின் விற்ற

தற்கு தத்துவம்கேட்கும் கேள்விப்பத்திரங்களை அம்பாந்தோட்டைக் கச்சேரியில் வைத்து 1905 ம் ஆண்டு டிசம்பர்மாசம் 5 ந் தேதி பகல் 12 மணி வரையில் உதவி ஏஜன்று அவர்களால் பாரமெடுக்கப்படும்.

கேள்விக்காறன் தானாக அல்லது அவர் ஏற்படுத்திய அவரின் காரியகாறன் குறித்த தலத்திலும் தேதியிலும் ஏஜென்று அவர்களின் முகதாவில் நில்லாதுபோனாலும், அல்லது அவரின் கேள்வியை ஏற்றுக்கொண்ட சமயத்தில் அவரின் கேள்விப்பத்திரத்தில் காணும் முதலால் மூன்றில் ஒரு பங்கைக் கட்டாதுபோனாலும் அவரின் கேள்வியைக் கவனிக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் சுத்தயீனமாக யிருக்குமாகில், உதவி ஏஜன்று அவர்களின் விருப்பப்படி தத்துவங்களை மேற்குறிக்கப்பட்ட கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் மேற்சொல்லிய தேதிகளில் பகல் 1 மணியளவில் பிரசித்த ஏலத்தில் அல்லது வேறுவிதம் விற்கப்படும்.

அதிக தொகையுள்ள கேள்வியை அல்லது யேதுமோர் கேள்வியை அங்கீகரிக்க உதவி ஏஜன்று கட்டுப்பட்டில்லை.

அம்பாந்தோட்டை கச்சேரி,
1905 ம் ஆண்டு நவம்பர் மீ 16 ந் உ.

ஜே. ஓ. கே. மேர்ட்டி,
அரசாட்சி உதவி ஏசண்டு.

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொருபங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப்பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப்பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும் வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல் வேண்டும். முதலாம் தவணைப் பணத்தைத் ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (பிச்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத் தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப்பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவு செலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும் காகிதபத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச் செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனைக் காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸ்பட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புது புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்றவுடனே அபின் பெற்றதொகையும் செலவான தொகையு மெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பந்திக் கோலங்களெல்லாம் சர்வ எழுதி நிரப்பியிருக்கவேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையை தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர்பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர்பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுள்ளவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவ்வொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனுகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப் பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பந்திகலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டம் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ, நாலு அவுன்ஸ, எட்டு அவுன்ஸ், ஒரு றுத்தல், இரண்டு றுத்தல், நாலு றுத்தல், எழு றுத்தல் ஆகிய அவாடுபோர்ச் சமானிய தராத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப்புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும் :—

சில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம் :—

| தேதி | | ரூ. அ. டி. | | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... | இலக்கம் 1 மொத்த விலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | | |

---

### கையிருப்பு ஸ்தொக புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை அறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

### அவாட்போய் நிறை.

| | | | |
|---|---|---|---|
| 16 டிறும் | = | 1 | அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 | றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 | குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 | கண்டிறற்வெற் |
| 20 கண்டிறற்வெற் | = | 1 | தொன் |

குறிப்பு.—180 கிறேய்ன் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி; அதாவது 7 டிறும்களுக்குக் குறைய.

[Tender for sale of Opium License, Jaffna.]

1899 ம் ஆண்டின் 5 ம் இலக்க அபின் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமைய இத்தால் நான் விளம்பரம்பண்ணுவதாவது : 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி துவக்கம் ஒரு வருஷத்துக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் எல்லைக்குள் அபின் விற்பதற்கு கொடுக்கப்படும் உத்தரவு ஒன்று.

அவ் உத்தரவுக்கு ஒட்டி முத்திரைவைத்த கேள்விப்பத்திரங்களை கவண்மேந்து ஏசண்டு அவர்கள் அல்லது உதவி ஏசண்டு அவர்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 5 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளுவார்கள்.

கேள்விக்காரர் தங்கள் கடதாசிகளை கொண்டுவந்து சமுகத்திற் கொடுக்கவேண்டும். தபால் மார்க்கமாய் வரும் கேள்விப்பத்திரங்கள் அல்லது சொல்லப்பட்ட நாள் மணித்தியாலத்துக்கு பின்வரும் கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா. கவண்மேந்து ஏசண்டு உயர்ந்த கேள்வியை அல்லது எதொரு கேள்வியை ஏற்க கடமைப்பட்டவரல்ல.

அவ் உத்தரவு 1899 ம் ஆண்டின் 5 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படியும் 1903 ம் ஆண்டின் 14 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படியும், 1905 ம் ஆண்டு ஆவணிமீ 25 ந் தேதியின் 6,071 ம் இலக்க "கசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட 1905 ம் ஆண்டு ஆவணிமாதம் 12 ந் திகதியைக் கொண்ட கட்டுப்பாடுகளுக்கு அமையவும் கொடுக்கப்படும்.

எல். எஸ். வூல்வ்,
ஜே. பி. லுவிசுக்காக,
வடமாகாண கவண்மேந்து ஏசண்டு.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 6 ந் உ.

---

[Tender for right to collect Forest Produce, Puttalam District.]

புத்தளம் டிஸ்திறிக்கின் கொவற்ணமேந்து காட்டிலிருக்கும் இதன் பின்னால் சொல்லப்படும் காட்டு பிரயோசனங்களை 1906 ம் ஆண்டுக்கு சேர்த்தெடுக்கும் உருத்துக்காகவென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை புத்தளம் உதவி கொவற்ணமேந்து ஏசன்றுத்துரை அவர்களின் ஒப்பிசில் 1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 14 ந் தேதி வியாழக்கிழமை பகல் 1 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

புத்தளம்பற்று ருஜகுமாரவண்ணிப்பற்று அக்கரைப்பற்று வடக்கும் தெற்கும் பொன்பரப்புபத்து தெமளஹத்பத்து முழுதும் புத்தளம் கடவத்தை எல்லைகளின் உருத்தை விற்கப்படும் :—

1. தேன், மெழுகு, மான்கொம்புகள், சாயவேர்கள் சேர்தெடுக்கும் உருத்துகள்.
2. ஆவரம்பட்டை கண்டப்பட்டை.
3. பிரம்புவிளாம்பளம்.
4. பீ அல்லது இலுப்பக்கொட்டை.
5. காஞ்சரங்கொட்டை.

இதைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களிடம் விசுவி அறிந்து கொள்ளலாம்.

எவ். போஸ்,
உதவி ஏசன்றுத்துரையவர்கள்.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகைமீ 25 ந் உ.

---

[Tender for Firewood to Railway, Jaffna.]

யாழ்ப்பாணப் பகுதிக் காட்டுக் கந்தோர்.

1906 ம் ஆண்டு தைமாசம் துவக்கமாக ஒரு வருஷத்துக்கு இலங்கை அரசாட்சியாரின் புகைரத பாவிப்புக்காக பின்னால் சொல்லப்படும் விறகுகளை கொடுக்க கொந்திருத்து எடுக்க விருப்பமானவர்களிடமிருந்து, 1905 ம் ௵ மார்கழி மாதம் 15 ந் தேதி, வெள்ளிக்கிழமை, மதியம் மட்டும் "புகைரதத்துக்கு விறகு கொடுப்பதற்கு கேள்விப்பத்திரம்" என உறையில் எழுதப்பட்ட இரு பிரதிகளான மூடி முத்திரை வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. விசேஷ புகைரதவண்டிக்கு விறகு—

(a) கிளிநொச்சியில் சாமான் பறிக்குமிடத்தில் 3,000 யார்.

கிளிநொச்சிக் குளத்துக்குள் விறகு வெட்டப்படவேண்டியது.

(b) தலாவைக்குக்கிட்ட விருக்கும் பெரிய றயில் பாதையில் 6.000 யார்.

தலாவை றயில் டேசனுக்குப் பக்கத்திலும், றயில்பாதை நெடுக 2 கட்டை தூரத்துக்கு நீடித்து ஒவ்வொரு பக்கத்திலும் கால் கட்டை தூரத்தில் அளக்கப்பட்ட காட்டின் பகுதியிலிருந்து விறகு வெட்டவேண்டியது.

II. தினந்தோறும் ஓடும் வண்டிகளுக்கு விறகு வவனியா றயில் டேசனில் 3,000 யார். றயில்வே டேசனிலிருந்து 2 கட்டை குறுக்களவுக்குள் விறகு வெட்ட வேண்டியது.

மேற்சொல்லப்படும் வேலைகளை கேட்க விருப்பமானவர்கள் எந்தக் கச்சேரியிலாவது ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டை யாழ்ப்பாண உதவிக் காட்டு உத்தியோகஸ்தருக்கு கொடுத்தால், அவர் கேள்விப்பத்திரம் எழுதவேண்டிய கடுதாசியைக் கொடுப்பார். இவ்விதமான கடுதாசியில் எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரம் யாழ்ப்பாணப்பகுதி உதவிக் காட்டு உத்தியோகஸ்தரவர்களுக்கும் அதன் இணைப்பிரதியைக் கௌரவ ஓடிற்றர் ஜெனறலுக்கும் ஒரேமுறையில் நேரே அனுப்பவேண்டியது.

கேள்விக்காரன் திரும்ப ஒப்பந்தத்துக்கு மாட்டமென்றால், அல்லது பிணைகட்ட மாட்டமென்றால் அரசாட்சியாருக்கு கட்டிய பணம் பறிமுதலாய்போய்விடும்.

ஒரு கன யார் விறகு என்ன வீதமென்று எழுத்திலும் இலக்கத்திலும் போடவேண்டும். மேற்சொல்லிய ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி வீதங்கள் போடவேண்டும்

ஒவ்வொரு நூறு யாருக்கும் ரூபா 5 வீதம் எடுத்த வேலையை சரியாய் நடத்துவதற்குப் பிணையாகப் பணம் கட்டவேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படுமிடங்களில் கேள்விக்காறன் தன் விலாசத்தையிடவேண்டும், அல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்கள் சரியல்லவென்று தள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களில் எதனையாவது அல்லது எல்லாவற்றையுமாவது தள்ளவும், ஒரு கேள்விப்பத்திரத்தில் ஏதாகுதல் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உருத்தும் அரசாட்சியாருக்கு உண்டு.

தேவையான விறகுகள் 3 அடி நீளத்திலும் 3 அங்குலம் துவக்கம் 9 அங்குலம் வரையும் குறுக்களவில் இருக்கவேண்டியது.

வேறு விளம்பரங்களை யாழ்ப்பாண உதவிக் காட்டு உத்தியோகஸ்தருக்கு விசுவி அறிந்துகொள்ளலாம்.

ஜி. டி. றெம்பினர்,
உதவி காட்டு உத்தியோகத்தர்,

காட்டுக் கந்தோர்,
1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 15 ந் உ.

---

[Arrack and Toddy Rent, 1906, Trincomalee.]

௧௯௦௬ ம் ௵-த்தின் திரிகோணமலைச் சாராயக் கள்ளுக் குத்தகைகள்.

உத்தமனுர் உபதேசாதிபதியாரால் நியமிக்கப்பட்ட "போட்" சமாஜம் ஒன்று, திரிகோணமலை அரக்குச் சாராயக் குத்தகையையும் கள்ளுக்குத்தகையையும் ௧௯௦௬ ம் ஆண்டு பிபர்வரி (மாசி)மீ ௧ ந் தேதி முதல் டிசெம்பர் (மார்கழி)மீ ௩௧ ந் தேதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைத் திறந்து கவனித்துப்பார்க்கும் நோக்கமாக, கவுன்சில் சங்கமண்டபத்திலே, ௧௯௦௫ ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி)மாதம் ௧௨ ந் தேதியில், கூடுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நியமித்த நாள் மத்தியானம் பன்னிரண்டு மணிக்குப் பிறகு யாதொரு கேள்விப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்களைச் சரிவரச் "சீல்" முத்திரைவைத்தொட்டி, கலோனியல் சக்கிறத்தார் கனம் சேர் ஏ. எம். ஆஷமோர், கே.ஸி.எம்.ஜி., என்று மேல்விலாசமிட்டு, "அரக்குச் சாராயக் குத்தகை ஒப்பந்தக் கேள்வி" என்றெழுதித் தபால் மார்க்கமாக அனுப்பிவைக்கினும் வைக்கலாம்; அல்லது கேள்விக்காரன்தானே கொண்டுவந்து "போட்" சமாஜத்துக்கு நேரே கொடுக்கினும் கொடுக்கலாம்.

விற்பனவுக் "கொந்திக" ச் சங்கேத மாதிரிக் கடுதாசிகளுந் தவறணைக்கடைகளின் இடாப்பும் இலங்கையில் எந்தக் கச்சேரியிலும் கேட்டு வாங்கிக்கொள்ளக்கூடும். மேலும் ஏதும் விவரம் அறியவேண்டுமானால், கிழக்கு மாகாணத்துக் கவண்மேந்து ஏஜன்றருக்குக் காகிதம் எழுதியாவது நேரே அவரைக் கண்டுகேட்டாவது அறிந்துகொள்ளலாம்.

இங்கிலிஷ் பேச அறியாத கேள்விக்காரர்கள் "போட்" சமாஜத்தாரோடு பேசிக்கொள்ளப்பிரியமானவர்கள், தங்கள் தங்கள் துவிபாஷகரைக் கூட்டிக்கொண்டுவரக்கடவர்கள்.

"கவுன்சில்" சங்க மண்டபத்துக்குக் கேள்விக்காரன்தானேயாவது அவனதிகாரம்பெற்ற ஏஜன்றுக் காரியஸ்தனாவது வந்திருந்து, தான் கேட்டவீதம் ஒருமாசக்குத்தகைத் தொகைப்பணம் உடன் கையில் கட்டுவதற்கு ஆயத்தமுமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டு கேள்விப்பத்திரங்களேனும் அதிகமானவைகளேனும் ஒரு சமமான தொகைக் கேள்வியாயிருக்கும் பக்ஷத்தில், இரண்டிலொன்று செய்வதற்குப் "போட்" சமாஜத்துக்கு இஷ்டம் உண்டு :—அதாவது, அந்தக் குறித்த கேள்விக்காறர்கள் மாத்திரமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் குத்தகையை உடன்கையில் போடலாம் ; அல்லது புதுக்கேள்விப்பத்திரங்களைச் கேட்கலாம்.

அதிகங் குறைவான கேள்வியையாவது யாதுமொரு கேள்வியையுமாவது ஏற்றுக்கொள்வதாகப் "போட்" சமாஜத்தார்கள் கட்டுப்பட்டவர்களல்ல.

குத்தகை வாங்கினவர் ஒரு கலனுக்கு நாலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் அரக்குச் சாராயம் விற்பனவு செய்தற்கு இடங்கொடுக்கப்படுவார்.

மேல்மாகாணக் (கொழும்புக்) கவண்மேந்து ஏஜன்றரிடம் எழுத்து மூலமாக ஆவது, நேரே கண்டு கேட்டாவது, கேள்விப்பத்திர மாதிரிக் கடுதாசிகள் சும்மா விலையில்லாமல் வாங்கிக்கொள்ளலாம்.

அதி தேசாதிபதி உத்தமனுரது கட்டளையின்படி,
ஜீ. எம். பௌலர்,
அக்டிங் கொலோனியல் சக்கிறத்தார்.

கொழும்புக் கலோனியல் ஆபீஸ்,
1905 ம் ஹூ நவம்பர்மீ 28 ந் உ.

---

[Sale of Kalladi Ferry Toll Rent, Batticaloa.]

இத்தாற் சகலருமறியவேண்டியது இவ்வாண்டு மார்கழி மாதம் 22 ந் தேதியாகிய வெள்ளிக்கிழமையன்று சாயந்தரம் 2 மணியளவில் மட்டுக்களப்புக் கச்சேரியில் கல்லடி ஆயக்குத்தகையை 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் மார்கழிமாதம் 31 ந் தேதி வரைக்குமாக பிரசித்த ஏலத்தில் கூறி விற்கப்படும்.

கூடிய கேள்விக்காறன் விற்பனவன்று முழுத்தொகையிலும் பத்திலொன்று காசாய்க் கட்டவேண்டியது. தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், விற்பனவு நடந்த 30 நாளைக்குள் முழுத்தொகையிலும் அரைவாசிக்கு பிணையேனும் அல்லது மூன்றிலொன்று காசாயேனும் கட்டவேண்டியது.

தேசாதிபதியவர்கள் அங்கீகரித்ததையிட்டு அறிவித்தவுடன் தேவையான பிணைகட்டி முடியாவிடின் பத்திலொன்று பறிமுதலாக்கப்படும். விலைக்கு வாங்குபவனின் உறுதிகளைப் பரிசோதனைப்பண்ணுவதற்கும் பிணைமுறிஎழுதுவதற்கும் முடிவுபண்ணுவதற்கும் அவற்றைப் பதிப்பிப்பதற்குமாக அரசாட்சியின் தரணிக்குப் போமதியாய் வரும் சலாரையும் கட்டவேண்டியதாய் வரும்.

ச. எவ். ஒப்கின்ஸ்,
அரசாட்சி ஏசண்டு.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1905 ம் ஹூ கார்த்திகைமீ 23 ந் உ.

---

[Election of Unofficial Members, Local Board, Gampola.]

இத்தால் அறிவிக்கிறதாவது 1898 ம் ஆண்டு கட்டளைச்சட்டத்தின்படி 1906 ம் 1907 ம் ஆண்டுகளுக்கு, கம்பளைப் பட்டணத்தின் தேசசௌக்கிய சீர்திருத்த சங்கத்திற்கு அரசாட்சி உத்தியோகமில்லாத மூன்று சங்கத்தவர்களைத் தெரிந்துகொள்ளும்படி 1905 ம் ஆண்டு மார்கழிமாசம் 15 ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கம்பளையில் பொலீஸ் கோட்டில் ஒரு கூட்டம் கூடப்படும்.

எச். வேஸ்,
மத்திய மாகாணத்தின் அரசாட்சி
செய்யும் ஏஜண்டு.

லோக்கல் போர்ட் ஆபீஸ்,
கம்பளை, 1905 ம் ஹூ கார்த்திகைமீ 29 ந் உ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

[C. Ed. Abeyewickrama.]

வதுளை டிஸ்திறிக்கு வெல்லவாய பகுதியில் சிங்களப் பாஷையில் வேலைபார்க்கிற நொத்தாரிஸ் ஆக எனக்கு உத்தரவு கொடுக்கும்படி, கொறனேலியச் எட்வர்ட் அபயவிக்கிரம ஆகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கக் கட்டளைசட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் 1905 ம் ஆண்டு நவம்பர்மாதம் 1 ந் தேதி தொடக்கமாக மூன்றுமாதம் சென்றதின்பின் மகத்துவம்தங்கிய தேசாதிபதி அவர்கட்கு விண்ணப்பப்பத்திரம் அனுப்புவேன் என்று இத்தால் அறிவிக்கிறன்.

ஸி. இ. அபயவிக்ரம.

வதுளை, 1905 ம் ஹூ நவம்பர்மீ 1 ந் உ.

---

[V. Ponniah.]

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணுவில் வீரகத்தியார் பொன்னையாவாகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மூன்று மாதங்களின் பின் யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப்பாஷையில் பணிவிடை நடத்திவர வென்னை யேற்றுக்கொள்ளும்படி மதியுத்தம தேசாதிபதியவர்களிடம் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறே னென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

வீ. பொன்னையா.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி, நுணுவில்,
1905 ம் ஹூ வைகாசிமீ 20 ந் உ.

---

[E. Sinnathambi.]

மட்டுக்களப்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த மண்முனைப்பற்றுக் காத்தான் குடியிருப்பில் வசிக்கும் இஸ்மாலெவ்வை சின்னத்தம்பி ஆகிய நான் 1877 ம் ஆண்டின் 2 இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் இதனடுத்த மூன்று மாசங்களின்பின் மேற்குறித்த காத்தான்குடியிருப்பில் தமிழ்ப் பாஷையில் நொத்தார்ஸ் உத்தியோகம்நடத்துவதற்காயேற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பம்பண்ண எண்ணியிருக்கிறேனென்பதை யித்தால் வெளிப்படுத்துகிறேன்.

இ. சின்னத்தம்பி.

1905 ம் ஹூ ஐப்பசிமீ 3 ந் உ.

---